சுருக்கம்.

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம் – சத்துணவுத் திட்டம் / ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றில் பணிபுரிந்து ஆசிரியர்கள், மேற்பார்வையாளர்கள் நிலை –2 மற்றும் பல்நோக்கு சுகாதார பணியாளர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்கள் – தொகுப்பூதியத்தில் பணிபுரிந்த காலத்தில் 50 விழுக்காடு காலம் ஓய்வூதிய கணக்கில் எடுத்துக்கொள்வது – ஆணை வெளியிடப்படுகிறது.

சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (சஉதி2) துறை,

அரசு ஆணை (நிலை) எண். 6

நாள்: 06–01–2010.
திருவள்ளுவர் ஆண்டு 2040
மார்கழி 22ம் நாள்

படிக்கப்பட்டது:-

1. அரசு ஆணை(நிலை) எண். 408, நிதித் (ஒய்வூதியம்) துறை, நாள். 25–08–2009.
2. சமூக நல ஆணையர், சென்னை அவர்களின் கடித எண். 22725/ சஉதி(நி)4/2009 நாள். 06–11–2009.
3. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 21–11–09 அன்று வெளியிடப்பட்ட அறிவிப்புகள்.

-----

ஆணை:-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், வரையறுக்கப்படாத பணி (Non Provincialised Service), தொகுப்பூதியம் (Consolidated Pay), மதிப்பூதியம் (Honorarium) மற்றும் தினக்கூலி (Daily Wages) அடிப்படையில் பணிபுரிந்து, நிரந்தரப் பணியில் 01.04.2003க்கு முன்னர் ஈர்க்கப்பட்ட அனைவருக்கும் பொருந்தும் வகையில், அவர்களை நிரந்தரமாகப் பணியில் ஈர்க்கப்படுவதற்கு முன், 01.01.1961 –க்குப் பின் பணிபுரிந்த வரையறுக்கப்படாத பணிக்காலம் (Non Provincialised Service), தொகுப்பூதியம் (Consolidated Pay), மதிப்பூதியம் (Honorarium) மற்றும் தினக்கூலி (Daily Wages) அடிப்படையிலான மொத்த பணிக்காலத்தில் பாதியை, சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு அவர்களது ஓய்வூதியத்திற்குத் தகுதியான பணிக்காலத்துடன் சேர்த்து ஓய்வூதியப் பயன்களுக்கு எடுத்துக்கொள்ள, ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட சமூக நல ஆணையர் அவர்களது கடிதத்தில், சத்துணவுத் திட்டத்தில் சத்துணவு அமைப்பாளராக பணிபுரிந்து ஆசிரியராக பணியில் சென்றவர்களுக்கும் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களாக பணிபுரிந்து அதன்பின் பதவி உயர்வில் மகளிர் ஊர்நல

அலுவலர் (ம) மேற்பார்வையாளர் நிலை–2 ஆக அரசு பணிக்கு சென்றவர்களுக்கும், சத்துணவு / ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தில் பணிப்புரிந்த காலத்தை ஓய்வூதியத்திற்கு எடுத்துக் கொண்டு, ஓய்வூதியம் (ம) பணிக்கொடை பெற்று வழங்குமாறு அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

3. இந்நிலையில் சத்துணவு, குழந்தைகள் மைய பணியாளர்கள் 21–11–09 அன்று நடத்திய நன்றி அறிவிப்பு மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பின்வருமாறு அறிவிப்பு செய்துள்ளார்கள்:-

> "சத்துணவுத் திட்டம் / ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றில் பணிபுரிந்து ஆசிரியர்கள், மேற்பார்வையாளர்கள் நிலை –2 மற்றும் பல்நோக்கு சுகாதார பணியாளர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு, சத்துணவுத் திட்டம் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றில் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்த காலத்தில் 50 விழுக்காடு காலம் ஓய்வூதியத்திற்கு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்".

4. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி சத்துணவுத் திட்டம் / ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றில் பணிபுரிந்து ஆசிரியர்கள், மேற்பார்வையாளர்கள் நிலை–2 மற்றும் பல்நோக்கு சுகாதார பணியாளர்களாகப் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு, சத்துணவுத் திட்டம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றில் தொகுப்பூதியத்தில் பணிபுரிந்த காலத்தில் 50 விழுக்காடு காலம் ஓய்வூதியத்திற்கு கணக்கில் எடுத்துக்கொள்ள அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வரசாணை நிதித்துறையின் இசைவை அ.சா.கு.எண்.3596/FS/P/09 நாள். 23–12–09 ல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பா. இராம மோகனராவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

சமூக நல ஆணையர், சென்னை–5.
முதன்மைச் செயலாளர் / ஆணையர்,
ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம், சென்னை–113.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
ஆணையர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை,சென்னை–15.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை–5/35/79.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
தலைமை துறை அரசு நிறுவனத் தணிக்கையர், சென்னை–2.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், சென்னை – 6.

நகல்:-

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (ஓய்வூதியம்)த் துறை, சென்னை –9.
சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் (அனைத்து பிரிவுகள்) துறை, சென்னை–9.
இருப்புக்கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.